In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : Spl.SC.15/2022

Deposition of P.W.1

****

Name திரு.காசி

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 7th day of October 2025.

**A1 to A4 Accused present.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கோவில்பட்டி மதுவிலக்கு பிரிவில் HC 657 தலைமைக் காவலராக பணிபுரிகிறேன். நான் இதற்கு முன்பு 2014 முதல் 2017 வரை ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். 05.08.2017 அன்று 12.30 மணியளவில் திரு.பால் ஐசக் மற்றும் திரு.பேச்சி ஆகிய உதவி ஆய்வாளர்களுடன் HC304 சுபானந்தம் மற்றும் நானும் ரோந்து பணிக்கு சென்று கொண்டிருந்த போது, திருக்குளம் நோக்கி போய்க் கொண்டிருந்த போது பால்குளம் சக்தி சேம்பர் முன்பு 2 லாரிகள் TN 69 A 5253 மற்றும் TN 69 S 4356 என்ற பதிவெண் கொண்டவை மற்றும் ஒரு Hitachi பதிவெண் இல்லாதது ஆகியவை அந்த செங்கல் சேம்பரின் உள்ளே இருந்து வெளியே வந்தது. அந்த வண்டிகளை சோதனை செய்வதற்காக நாங்கள் இறங்கிய போது எங்களை பார்த்ததும், லாரியை ஓட்டி வந்த நாங்குநேரியைச் சேர்ந்த மணி என்பவர் ஓடி விட்டார். மணியுடன் அந்த லாரியின் ஓனர் பாஸ்கர் என்பவர் இருந்தார். மற்றொரு லாரியை ஓட்டி வந்த திருக்களூர் முருகன் என்பவர் வண்டியை நிறுத்தி விட்டு ஓட முற்பட்ட போது அவரையும் பிடித்தோம். HitaCHI ஓட்டுநர் மேலநாட்டார்குளம் மரியஜான் என்பவரையும் பிடித்தோம். இரண்டு லாரிகளிலும் தலா ஒரு யூனிட் ஆற்று மணல் இருந்தது. மணல் அள்ளுவதற்கு உதவியாக இருந்த

RAMANUJAM VASANTHI
Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.10.07 14:15:06 +0530

முத்தையா, சேர்மத்துரை, ராஜ செல்வம் மற்றும் ஒருவர் இருந்தார்கள். மணல் அள்ளுவதற்காக Hitachi-ஐ பயன்படுத்தியுள்ளனர். எதிரிகள் பாஸ்கர், லாரி ஓட்டுநர்கள் மணி மற்றும் முருகன், முத்தையா, ராஜசெல்வம், சேர்மத்துரை, சுடலைமுத்து ஆகியோரை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தோம். அந்த மூன்று வாகனங்கள் மற்றும் அதிலிருந்த மணலையும் அத்தாட்சி மூலம் கைப்பற்றினோம். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.1** ஆகும். அதில் உள்ள மூன்றாவது கையொப்பம் என்னுடையது ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்களில் உள்ளது கைப்பற்றிய வாகனங்கள் தான். அவை முறையே **அ.சா.ஆ.2** வரிசை (7 எண்ணிக்கைகள்). காவல் நிலையத்திற்கு அன்றைய தினம் சுமார் 2 மணிக்கு நாங்கள் அனைவரும் வந்தோம். பின்னர், வழக்கு பதிவு செய்தவற்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்குவிசாரணை :</u> (அனைத்து எதிரிகளுக்காக)**

சம்பவ இடமானது திருநெல்வேலி டு திருச்செந்தூர் நெடுஞ்சாலை என்றால் சரிதான். அது எப்போதும் போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் சரிதான். நானும், சுபானந்தன் தலைமைக் காவலரும் என்னுடைய பைக்கிலும், உதவி ஆய்வாளர்கள் இருவரும் அவரவர்களது பைக்கிலும் வந்தனர். ரோந்து பணிக்காக சம்பவ இடம் நோக்கி தான் போனோம். வேறு எங்கும் செல்லவில்லை. எந்தெந்த எதிரிகளை யார் யார் பிடித்தார்கள் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை என்றால் சரிதான். பிடித்து வைத்திருந்தவர்களை எந்த வாகனத்தில் காவல் நிலையம் கொண்டு சென்றோம் என்றால் எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்ட வாகனங்களையும் சம்பவ இடத்திலிருந்து எவ்வாறு காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றோம் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அத்தாட்சியை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரிதான். அதை யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் படிவம் 91 பிறப்பிக்கப்பட்டதா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆற்றுமணல் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆற்று மணல் எவ்வளவு இருந்தது என்பதை கண்டறிய எதனை வைத்து அளந்து பார்த்தோம் என்றால் குத்துமதிப்பாக பார்வையிலேயே தெரிந்து கொண்டோம். கைப்பற்றப்பட்ட வாகனங்களின் உரிமையாளர் யார் என்பது எனக்கு

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.10.07 14:15:14 +0530

தெரியுமா என்றால் தெரியாது. மணல் திருடுவது சம்பந்தமாக வருவாய் ஆய்வாளர் யாரேனும் காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமாக புகார் ஏதும் கொடுத்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரி பாஸ்கர் சக்தி சேம்பரின் உரிமையாளர் மற்றும் அரசு உரிமம் பெற்று செங்கல் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான். எதிரிகளின் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாக போடப்பட்டுள்ள பொய் வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிகள் அனைவரும் வயதானவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் மனு ஏதும் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் அதில் கையெழுத்திட்டுள்ளேனா என்றால் போடவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்பதால் எனக்கு எந்த விபரமும் எனக்கு ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், உயர்அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சேம்பர் செட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை எடுத்து வந்து பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வீட்டிலிருந்து எதிரிகளை அழைத்து வந்து பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்ாறல் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்டுள்ள வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.10.07 14:15:21 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**

In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.SC.15/2022
Deposition of P.W.2
****

Name திரு.பேச்சி

Father's Name
Village
Taluk
Calling
Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 7th day of October 2025.

A1 to A4 Accused present.

**முதல் விசாரணை :**

நான் இறுதியாக தூத்துக்குடி மதுவிலக்கு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2018ம் ஆண்டு ஓய்வு பெற்றுவிட்டேன். நான் முன்பு 2016 முதல் 2017 வரை ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். 05.08.2017 அன்று 12.30 மணியளவில் நானும், ஆழ்வார்திருநகரி உதவி ஆய்வாளர், திரு.பால் ஐசக், HC304 சுபானந்தம் மற்றும் 657 காவலர் காசி ஆகியோர் ரோந்து பணிக்கு சென்று கொண்டிருந்த போது, திருக்குளம் நோக்கி போய்க் கொண்டிருந்த போது பால்குளம் சக்தி சேம்பர் முன்பு TN 69 A 5253 டிப்பர் லாரி மற்றும் TN 69 S 4356 டிப்பர் லாரி என்ற பதிவெண் கொண்டவை மற்றும் ஒரு Hitachi பதிவெண் இல்லாதது ஆகியவை அந்த செங்கல் சேம்பரின் உள்ளே இருந்து வெளியே வந்த போது எங்களை பார்த்து விட்டு வண்டியை நிறுத்தி விட்டு அதில் இருந்தவர்கள் கீழே இறங்கி ஓடி விட்டார்கள். ஓடியவர்களில் ஐந்து பேரை நாங்கள் சுற்றி வளைத்து பிடித்தோம். வண்டியை நாங்கள் சோதனையிட்ட போது இரண்டு லாரிகளிலும் தலா ஒரு யூனிட் ஆற்று மணல் இருந்தது. பிடிபட்ட ஐந்து பேர்களையும் விசாரித்த போது Hitachi–ஐ ஓட்டி வந்தது ஆசீர் ஸ்டீபன் என்பவர் என்பதும், TN 69 A 5253 டிப்பர் லாரி ஓட்டி வந்த நாங்குநேரியைச் சேர்ந்த மணியும், அந்த லாரியின் ஓனர் பாஸ்கர் என்பதும், TN 69 S 4356 பதிவெண் கொண்ட மற்றொரு லாரியை ஓட்டி வந்தவர் திருக்களூர் முருகன் என்பவர் என்பதும்

RAMANUJAM VASANTHI Digitally signed by RAMANUJAM VASANTHI Date: 2025.10.07 14:15:28 +0530

தெரிய வந்தது. பிடிபட்ட மற்ற நால்வர் ராஜ செல்வம், சுடலைமணி, சேர்ம மூர்த்தி மற்றும் முத்தையா ஆகியோர் மணல் அள்ளுவதற்கு உதவியாக இருந்தனர். ஆசீர் ஸ்டீபன், ராஜசெல்வம், சுடலைமணி, சேர்ம மூர்த்தி மற்றும் முத்தையா ஆகிய ஐவரையும் பிடித்து விசாரித்த போது மணலை திருச்செந்தூருக்கு கொண்டு போவது தெரிய வந்தது. பின்னர், அவர்கள் ஐவரையும் கைது செய்தோம். அந்த மூன்று வாகனங்கள் மற்றும் அதிலிருந்த மணலையும் அத்தாட்சி மூலம் கைப்பற்றினோம். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.1** ஆக ஏற்கெனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தனிநபர்கள் இல்லாததால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையெழுத்து செய்துள்ளோம். அதில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது ஆகும். பின்பு எதிரிகள் சொத்து சகிதம் 14.00 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தோம். பின்னர், நிலையக்குற்ற எண்.144/2017 ன் கீழ் இதச பிரிவு 379-ன் படி உதவி ஆய்வாளர் திரு.பால் ஐசக் வழக்கு பதிவு செய்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்களில் உள்ளது கைப்பற்றிய வாகனங்கள் தான். அவை ஏற்கெனவேயே **அ.சா.ஆ.2** வரிசை (7 எண்ணிக்கைகள்) ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்குவிசாரணை :</u> (அனைத்து எதிரிகளுக்காக)**

சம்பவ இடமானது திருநெல்வேலி டு திருச்செந்தூர் நெடுஞ்சாலை என்றால் சரிதான். அது எப்போதும் போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் சரிதான். நாங்கள் நால்வரும் காவல் ஜீப்பில் சென்றோம். ரோந்து பணிக்காக சம்பவ இடம் நோக்கி தான் போனோம். வேறு எங்கும் சென்றோமா என்றால் ஞாபகமில்லை. எந்தெந்த எதிரிகளை யார் யார் பிடித்தார்கள் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை என்றால் சரிதான். பிடித்து வைத்திருந்தவர்களை எந்த வாகனத்தில் காவல் நிலையம் கொண்டு சென்றோம் என்றால் எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்ட வாகனங்களையும் சம்பவ இடத்திலிருந்து எவ்வாறு காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றோம் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அத்தாட்சியை சம்பவ இடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் தயார் செய்தார். இந்த வழக்கில் படிவம் 91 பிறப்பிக்கப்பட்டதா என்றால் தயார் செய்யப்பட்டது. ஆற்றுமணல் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆற்று மணல் எவ்வளவு இருந்தது என்பதை கண்டறிய எதனை வைத்து

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.10.07 14:15:39 +0530

அளந்து பார்த்தோம் என்றால் குத்துமதிப்பாக பார்வையிலேயே தெரிந்து கொண்டோம். கைப்பற்றப்பட்ட வாகனங்களின் உரிமையாளர் யார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மணல் திருடுவது சம்பந்தமாக வருவாய் ஆய்வாளர் யாரேனும் காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமாக புகார் ஏதும் கொடுத்துள்ளார்களா என்றால் சரிதான். எதிரி பாஸ்கர் சக்தி சேம்பரின் உரிமையாளர் மற்றும் அரசு உரிமம் பெற்று செங்கல் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் தவறு. உரிமையாளரின் மகன் தான் பாஸ்கர். எதிரிகளின் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாக போடப்பட்டுள்ள பொய் வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிகள் அனைவரும் வயதானவர்கள் என்றால் சரிதான். சேம்பர் செட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை எடுத்து வந்து பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வீட்டிலிருந்து எதிரிகளை அழைத்து வந்து பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்ாறல் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்டுள்ள வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.10.07 14:15:44 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**